https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சித்தர்கள் மற்றும் அவர்களின் அறிவியல் தொலைநோக்கும்

**ஜெ. சுவிதா**
உதவிப்பேராசிரியர்
கற்பக விநாயகா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
மதுராந்தகம், செங்கல்பட்டு

**ஆய்வுச் சுருக்கம்**

*சித்தர்கள் தங்களின் வாழ்க்கை முறையை அறநெறியுடன் வாழ்ந்து வந்தார்கள் என்பது உண்மையாகும். பொன், பொருள், பெண் போன்றவற்றிற்கு ஆசைப்படாதவர்கள் சித்தர்கள். சித்தர்கள் பழங்காலத்தில் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வந்தனர் என்பது வரலாறு இவர்களின் வாழ்க்கை முறை அன்றைய மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது என்று கூறலாம். இவர்கள் சொன்ன யோகம், மருத்துவம், வாழ்க்கை முறை போன்றவ்றறை நாம் கடைப்பிடித்தால் நமது வாழ்வு வாழ்வாங்கு வாழலாம். அதுபோல் இவர்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்தால் இவ்வுலக வளர்ச்சிக்கும் அதாவது அறிவியல் முன்னேற்றத்திற்கும் பல உண்மைகள் நமக்கு தெரியவரும் எனவே சித்தர் இலக்கியங்களை படிப்போம் சித்தர்களை போற்றுவோம்.*

**முன்னுரை**

*உலகம் என்று தோன்றியதோ அன்று தமிழ் மொழியும்,தமிழனும் தோன்றினார்கள் என்று அகழ்வாராய்ச்சி கூறுகிறது. அது போல் படிப்படியாக நாகரிகம் அடைந்து செம்மையுற்ற குடியும் தமிழ் குடியே என்பது உண்மையாகும். நம் தமிழர்கள் நிலவியல், வானியல், கணிதவியல் பொருளியல், மருத்துவம், கட்டடக்கலை போன்றவற்றுக்கு வல்லுநர்களாக விளங்கினார்கள். காலம் கடந்து சென்றாலும் நம் முன்னோர்கள் சொன்ன பொன்மொழி கள், சித்த மருத்துவ குறிப்புகள் போன்றவற்றை நமக்கு கொடையாக கொடுத்து சென்றார்கள். அதுபோல் அறிவியல் கண்டுபிடிப்புக்கு முன்னர் காடுகளிலும், மலைகளிலும் வசித்து வந்த சித்தர்கள் தங்களுடைய அனுபவத்தால் அறிவியல் கருத்துகளையும் பாடல்களாக எழுதி வைத்து விட்டு சென்றார்கள். அப்படி அவர்கள் எழுதி வைத்து விட்டு சென்ற பாடல்கள் தான் இன்று நாம் படித்து வியப்புற்று மகிழ்கிறோம். சித்தர்கள் என்று சொன்னால் அன்றைய கால மருத்துவர். அறிவியல் அறிஞர், உலக மெய் ஞானத்தை உணர்ந்து தன்னலமற்ற பொது வாழ்வினை வாழ்ந்து, புதுமைகள் புகுத்துதுகின்ற சீர்திருத்த வாதிகளாக இருந்துள்ளனர் என்றே கூற வேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் பசிப்பிணி அற்று நாள் வாழ்வு வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் இவர்கள் பயன்படுத்திய பொன்மொழிகள் அனைத்தும் மக்கள் நல் வாழ்வு வாழ வழி சொல்லும்*

மந்திரங்களாகவும், அறிவியல் சிந்தனைகளாகவும் சித்தர் இலக்கியங்கள் திகழ்கிறது என்றே இவ்வாய்வு நகர்கிறது.

**சித்தர்கள்**

சித்தர்கள் உலகம் முழுவதையும் ஒன்றாக பார்ப்பவர்கள் மக்களின் நன்மைக்காக தங்களின் வாழ்நாளையே அர்ப்பணித்தவர்கள் மனித மனம் எப்படிப்பட்டது? அதன் சித்தி என்ன? என்பதை உணர்ந்தவர்கள் அறிவியல் அதாவது விஞ்ஞானம் பிறப்பதற்கு முன்பே மனித உடலை நுணுகி ஆராய்ந்தவர்கள் என்னென்ன நோய்க்கு என்னென்ன மருத்துவம் என உணர்ந்து சிகிச்சை செய்து, நோயில்லா வாழ்வு வாழ வழிகாட்டியவர்கள். கலைகள் அனைத்தையும் அறிந்தவர்கள்.

**சித்தர்கள்**

- பாம்பாட்டி சித்தர்
- திரு மாளிகை தேவர்
- தேரையர்
- கருவூரார்
- சிவா வாக்கியர்
- திரு மூலர்
- நாராயண பிராந்தர்
- காகபுசுண்டர்
- அநாதி சித்தர்
- பத்திரகிரியார்
- இடைக்காடர்
- குதம்பை சித்தர்
- கொங்கணர்
- போகர்
- இஸ்லாமிய ராமதேவர்
- பிரம்பமுனி கோரக்கர்
- ரோமசர்
- சட்டைமுனி
- பட்டினத்தார்
- புலத்தியர்

போன்ற சித்தர்கள் மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து மக்களுக்கு நல்லதை கற்றுத் தந்தனர்.

"சித்தர் என்ற சொல்லுக்கு பொருள் கண்டறிய வேண்டுமென்றால் சித்தர் என்ற சொல் சாதனை புரிந்தவர், சித்தியை அடைந்தவன்,தேவர்களில் ஒரு பிரிவினர் திறமையாளர், கெட்டிக்காரர், முழுமை அடைந்தவர், வெற்றியாளர், வெற்றியை ஈட்டியவர் என்று பல பொருள்கள். ஆங்கிலத்தில் கூட சித்தம் என்ற சொல்லுக்கு (Accomplished, Established, demonstrated, proved, valid, matured, eminet, Asemi deving being, An inspired sage or saint or seer) என்று பல பொருள் கூறப்பட்டுள்ளது.

**யார் சித்தர்?**

சித்தர்கள் தங்களிடம் இருக்கும் மிகை ஆற்றலை வெளிப்படுத்த சிற்சில சித்து வேலைகள் செய்தனர், இதன் மூலம் மக்களை தன பக்கம் இழுத்து இச்சமூகத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் சித்தர்கள் அவ்வகையில் சொல்லப்போனால் "வள்ளலார் கூட மக்களைத் தன வயப்படுத்த சிற்சில சித்துகளைச் செய்து காட்டி இருக்கிறார்கள். அவற்றில் ஒன்று பொன்னாக்கும் சித்து. எளிய கனிம பொருள்களைப் பொன்னாக்கி வீசி எறிந்திருக்கிறார்கள். இவரிடம் இருந்து சித்து வேலைகளைக் கற்று கொள்வதற்காகவே மக்கள் கூட்டம் கூட்டமாக கூடி நிற்கும் என்று இவரின் "அது போல திரு ஞானசம்மந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சங்கரர், பட்டினத்தடிகள், கபீர் தாசர், சீரடி சாய்பாபா, ராகவேந்திரர், இராமணமுனிவர், துளசி தாசர், இயேசு பெருமான், புத்த பெருமான், போன்றவர்கள் கூட தங்களின் ஆற்றலைக் காட்ட சித்து வேலைகளைச் செய்துகாட்டி இருக்கிறார்கள்". இன்று இருபத்திரண்டாம் நூற்றாண்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த நூற்றாண்டிலும், பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சித்தர்கள் பற்றி பேசுகிறோம். அதுவும் குறிப்பாக அறிவியலோடு தொடர்புடைய சித்த மருத்துவம் பற்றி மக்கள் பேசுகின்றனர். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் 2020-2021 இரண்டு ஆண்டுகள் உலகையே உலுக்கிய பெரு நோயான கொரோனா என்ற நோயால் உலகமே அடங்கி ஒடுங்கி கொண்டது. இந்நோயின் போதுதான் நமது முன்னோர்கள், அதாவது சித்தர்கள் சொல்லிச் சென்ற, நமக்கு கற்றுத் தந்த பழைய சித்தர்களின்

இலக்கியங்களை தேடிப் பிடித்து அதில் வருகின்ற மருத்துவ குறிப்புகளை படித்து கொரோனா என்ற கோடிய நோயை கபசுர குடிநீர், சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி, எலுமிச்சை போன்றவற்றைக் கொண்டு நாம் தமிழ் நாட்டை விட்டு விரட்டினோம். இதன் பெருமை சித்த மருத்துவத்தையே சென்றடை யும் என்பதில் ஐயமில்லை. சித்த மருத்துவ களஞ்சியம், சித்தர்கள் தொடாத எல்லைகளே இல்லை என்று கூறுகிறது. அணு அறிவியல், விண் அறிவியல், ஐந்திணை அறிவியல், கால ஒழுக்கம், சமய அறிவியல், மருத்துவ அறிவியல் என பலத் துறைகளில் தனது பாடல்கள் மூலம் அறிவியல் கருத்துக்களை அள்ளி வீசுகிறது சித்தர்கள் பாடல்கள்.

நாம் பல நூற்றாண்டுகள், பல கோடிகள் செலவு செய்து கண்டறிந்து அறிவியல் கருத்துகளை எல்லாம் சித்தர்கள் தங்கள் மெய் ஞானத்தால் உணர்ந்து பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கணித்து சொல்லியி ருப்பது ஒரு அறிவியல் அதிசயமாகும்.

இப்பூமியில் பிரபல பெரு வெடிப்பு பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்டது. இப்பெரும் வெடிப்பினால் நெருப்பு தோன்றி ஹைட்ரோ கார்பனால் இந்த உலகம் தோன்றியது என்ற பிக் பேங்க் தியரி பல நூறு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து சொன் னதை, சித்தர்கள் தங்கள் பாடல் மூலம்

**தேடரு மகண்டவொளிப் பிழம்பாய் ஞனா**

என்ற பாடல் வரிகள் மூலம் தேரையர் குண வாசகம் பாடல்கள் மூலம் அறியலாம்.

## நானோ தொழில் நுட்பம்

இன்றைக்கு உலகம் முழுக்க அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்து கொண் டியிருக்கிறது. இவ்வளர்ச்சியில் மக்களுக்கு நன்மை, தீமை இரண்டும் இருக்கிறது என்பதை யாராலும் மறக்க முடியாது. இவ்வாறான சூழ்நிலையில், திருமூலர் அவர்கள் தனது நூலில் மருந்துகள் உலோகங்கள், மின் சாதனங்கள் என நானோ தொழில் நுட்பம் பெருகி வரும் சூழலில் எந்த நிலையில் ஆற்றல் அதிகம் என்பதைத் திருமூலர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

**மேவிய சிவன் வடிவது சொல்லிடில்**

**கோவின் மயிரொன்று நூறுடன்**

**கூறிட்டு**

**மேவிய கூறது ஆயிரம் ஆயினால்** - திருமூலர்

என்ற பாடல் மூலம் ஜீவன் என்ற ஆற்றல் ஒரு பொருளை நூறாயிரம் மடங்கு நுண்மை படுத்துவதன் மூலம் முழுமையாக பெறமுடி யும் என்ற தற்போதைய 'நானோ' டெக்னாலஜி தொழில் நுட்பத்தை அறிவியல் முறையில் அந்த காலத்திலேயே திருமூலர் விலக்கியதை நம்மால் நடைமுறையில் காணமுடிகிறது.

## அணுக்கொள்கை

அணுக்களை பற்றி சங்க காலத்து புலவர்கள் அனைவரும் தங்கள் கருத்துகளை மக்களுக்கு கூறி சென்று உள்ளனர். அதாவது ஔவை தொடங்கி திருவள்ளுவர், பாரதியார் மற்றும் சங்க இலக்கியங்கள் போன்றவற்றில் அணுக்கொள்கைப் பற்றியும் அணுக்களின் தன்மைப் பற்றியும் பல கருத்துக்களை கூறினார்கள் என்பத பலசான்றுகள் உள்ளது. அச்சான்றுகள் பின் வருமாறு இயற்கை அறிவியல் திருக்குறளின் பெருமையை கூறும்போது.

**"அணுவைப் பிளந்து ஏழ் கடலைப் புகட்டி**

**குறுகத் தெறித்த குறள்"**

என்று சொல்லும்போது அணு என்பது கண்களுக்கு புலப்படாத மிகச் சிறிய மூலக கூறுகள் என்பது அறிவியல் கண்டுபிடிப் பாகும். ஆயினும் பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஔவை அனுப்பற்றி பாடல் எழுதி இருப்பது நம்மை வியப்புக்குள்ளாக் கிறது. அது போல் மகாகவி பாரதி கூட அணுக்களின் அசைவுகள் பற்றி அழகு தமிழில்

**இடையின்றி அணுக்களெல்லாம்**

**சற்றுமென இயல் நூலார் இசைத்தல்**

**கேட்டோம்.**

என்று தனது கவிதை அணுக்கள் பற்றி கூறியிருக்கிறார்.

திருமூலர் அவர்கள் அனுக் கொள்கைப் பற்றி கூறும்போது..

**அணுவில் அணுவினை ஆதி பிரானை**

**அணுவில் அணுவினை ஆயிரம் கூறிரு**

**அணுவில் அணுவினை அணுக வல்லார்**

கட்கு

என்ற பாடலில் அணுவினை உடைத்து அணுகினும் வல்லமைப் படைத்தவர்களால் இவ்வுலகையே தன் வயப்படுத்த முடியும் என அனுவின் வலிமையை மக்களுக்கு கூறியிருக்கிறார்.

அதுபோல் சட்டைமுனி சித்தர் ஐம்பூதங்களால் ஆகிய உலகின் பொருட்கள் யாவும், மனித உடலில் ஐம்பூத கூறுபாட்டில் காணப் படுகின்றன. உலகின் உள்ள அணைத்து இடங்களிலும் இயற்கையின் மாறுபாட்டால் எப்படி போர் அழிவுகள் ஏற்படுகின்றதோ, அதுபோல் மனித உடல்களில் ஐம்பூதங்களின் மாறுபாட்டில் நோய்கள் மனிதனுக்கு வந்து இறந்துவிடுகிறான்.

## சிவ வாக்கியர்

சித்தர்கள் ஜீவன் என்னும் அறிவும் சிவனும் ஒன்றுதான். அறிவுதான் மனிதர்களுக்கு கடவுள் எனவும் சித்தர் பாடல்கள் நமக்கு விளக்குகிறது.

**நட்டகல்லை தெய்வமென்று**

**நாலு புட்பம் விற்றிலை**

**சுற்றி வந்து முணு முனுத்துவென்று**

**சொல்லும்**

என்ற பாடல் மூலம் கடவுள் என்பவர் நம் உள்ளேயே இருக்கிறார் அதைத்தேடி எங்கும் அலைய வேண்டாம் என்ற உண்மையை ஆணித்தரமாக குறிப்பிடுகிறார்.

## ஐந்திணை அறிவியல்

சங்க இலக்கிய நூல்கள், மற்றும் இலக்கண நூலாக தொல்காப்பியம் நமது நிலப்பாகுபாட்டை ஐந்து வகையாகப் பிரித்து காட்டுகின்றனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று தொல்காப் பியம் பிரிக்கிறார். இந்த ஐந்து நிலத்தில் வாழுகின்ற மக்கள் தங்களுக்கு தேவையான உணவுகளை மட்டும் உணவாக உட்கொள்ள வேண்டும் என்று அறிவியல் முறைப்படி உணவு முறைகளை சித்தர்கள் கூறுகின்றார் கள்.

குறிஞ்சி போன்ற மலை பகுதியில் வசிப்பவர்கள் கிழங்குகளையும் முல்லை போன்ற காடுகளில் வசிப்பவர்கள் பழங்களையும், மருத நிலத்தில் வசிப்பவர்கள் விவசாயத்தில் மூலம் கிடைக்கும் தனியாறுகளையும், நெய்தல் போன்ற கடல் பகுதியில் வசிக்கும் மக்கள் மீன், நண்டு ஆகியவற்றை உணவாக உட்கொள்ள வேண்டும் என்று அறிவியல் கூறுகிறது. அதுபோல் பாலை நிலம் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற இடம் அல்ல என்றும் இலக்கண நூலில் சித்தர்களும் கூறுகின்றார்கள்.

**“குறிச்சி வரு நிலத்திற்கு**
**கொனற்றடுணடிரத்தம்**

**முல்லை நிலத்தயமே முறிநிறை**

**மேனினுமவ்**

**மருத நிலம் நன்னிர் வளருமான்றைக்**

**கொண்டே ............**

**நெய் தனிது மேலுப்பை நீங்கா துளினுமது**
**பாலை நிலம் போற் படரைப் பிறப்பிக்க”**

என்ற பாடல்கள் மூலம் உணவு உட்கொள் ளும் முறையை அறிய முடிகிறது.

## முடிவுரை

சித்தர்கள் தங்கள் காலத்திலேயே மருத்துவம், இயற்கை அறிவியல், வானியல், ஆன்மீகம் சார்ந்த கோட்பாடுகள், நல்வாழ்வு மற்றும் ஆழ்ந்த அறிவியல் கருதுகோள்களான நானோ தொழில்நுட்பம், மின்னாற்றல், உலகின் தோற்றம் பற்றிய கருத்துக்களை அடிப்படையாக கொண்டு ஆராய்ச்சி செய்துள்ளனர். சித்தர்களின் அறிவு புதிய கண்டுபிடிப்புகளின் முன்னோடியாகவே உள்ளன. மேலும் இதனை ஆராய்ந்து எதிர்கால சந்ததியினருக்குப் பயனுள்ள வகையில் பரப்ப வேண்டும்.

## சான்றெண் விளக்கம்

1. மு.பசு.மலையரசு - செந்தமிழும் சித்த மருத்துவமும் - பக்.32
2. மு.பசு.மலையரசு - பக். 34
3. மு.பசு.மலையரசு - பக்.36
4. டாக்டர்.கா கா.உத்தமதாசன் தோற்ற கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்.
5. முனைவர்கா.அரங்கசாமி - திருமந்திரம்
6. முனைவர்கா.அரங்கசாமி - திருமந்திரம்
7. சிவாவாக்கியர்-சித்தர் பாடல்-தந்திரம்-7.